## புத்தகம்

புதிதாக நீ வந்த பிறகு
என்னைப் பெட்டிக்குள்ளே பூட்டி வைத்துவிட்டாய்
எனைத் தட்டி எழுப்பிட மனமின்றி – தள்ளி
நடக்கின்ற உள்ளங்களைக் காணும் போது
ஊமையாய் அழுகிறேன் நான் இங்கே
ஊடுருவிய கரையான்களின் அரிப்பில்
காணாமல் போவது என் காகிதங்கள் மட்டுமல்ல
உன் காலங்களும் கனவுகளும் கூடத்தான்….

வ. மரியநித்தின்
21BT03